**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை– 2016–17 ஆம் நிதியாண்டிற்கு பார்வையற்றோருக்கான அரசு சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்கள் தேர்வு எழுத அமர்த்தப்படும் உதவியாளர்களுக்கு உதவித் தொகை (Scribe Assistance) வழங்கும் திட்டத்திற்கு கூடுதல் நிதி ரூ.4,83,000/– ஒப்பளிப்பு செய்து– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1D) எண்.32 — நாள்: 18–04–2017
ஹேவிளம்பி, சித்திரை 5,
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்க:

1. அரசாணை(1D) எண்.82, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 25–11–2016.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் செ.மு.ந.க.எண்.2971/ சி.ப.தி/ 2016, நாள் 27.12.2016.

–––––––

**<u>ஆணை:</u>**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2016–17 ஆம் நிதியாண்டில் அரசு அங்கீகாரம் பெற்ற சிறப்பு பள்ளிகளில் கல்வி பயிலும் பார்வையற்ற மாணவ / மாணவியர்களுக்கு தேர்வு எழுத அமர்த்தப்படும் உதவியாளர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை வழங்கும் திட்டத்திற்கு திட்டத் தொடராணையும், மேலும், இத்திட்டத்திற்கென தேவைப்படும் ரூ.40,07,700/– நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ஒப்பளிக்கப்பட்ட தொகையான ரூ.40,07,700/–ல் ரூ.39,92,700/–ஐ மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் / அரசு சிறப்பு பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது என்றும், மீதம் ரூ.15,000/– உள்ளது என்றும், மேலும், தற்சமயம் பெறப்பட்ட அறிக்கையின்படி கூடுதலாக கன்னியாகுமாரி மாவட்டத்திற்கு 37 மாணவ / மாணவியர்களுக்கு ரூ.1,61,100/–ம் திருவண்ணாமலை மாவட்டத்திற்கு 79 மாணவ / மாணவியர்களுக்கு ரூ.3,21,900/– ஆக மொத்தம் ரூ.4,83,000/– கூடுதல் நிதி தேவைப்படுகிறது என்றும், ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் மீதமுள்ள தொகை ரூ.15,000/– தவிர்த்து கூடுதலாக தேவைப்படும் ரூ.4,68,000/– ஐ நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

(த.பி.பா)

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்து பார்வையற்ற அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற சிறப்பு பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு தேர்வு எழுத அமர்த்தப்படும் உதவியாளர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் 2016–17 ஆம் நிதியாண்டிற்கு, கூடுதலாக கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 37 மாணவ / மாணவியர்களுக்கு ரூ.1,61,100/–ம் திருவண்ணாமலை மாவட்டத்திற்கு 79 மாணவ / மாணவியர்களுக்கு ரூ.3,21,900/– என மொத்தம் தேவைப்படும் தொகை ரூ.4,83,000/– (ரூபாய் நான்கு இலட்சத்து எண்பத்து மூன்றாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்:–

“2235– சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன்–101–மாற்றுத் திறனாளிகள் நலன்–I மாநிலச் செலவினங்கள்–CS–பார்வையற்றோர் பள்ளி மாணவர்களுக்கு எழுத்தர் உதவி அளித்தலும் உதவி ஆட்களுக்கான செலவுகளும்–33–தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல்–02–ஊதியம்”.
(து.தொ.கு..2235–02–101–CS–3328)

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 18861/நிதி(சந)/2017, நாள் 17.04.2017–ல் கண்டுள்ள நிதித் துறையின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர். (மு.கூ.பொ.)**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கன்னியாகுமரி மற்றும் திருவண்ணாமலை (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் கன்னியாகுமரி மற்றும் திருவண்ணாமலை (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநில கணக்காயர் (இருப்பு), தலைமைச் செயலகம், சென்னை–9.

**நகல்:–**
நிதி (சந/வ.செ.பொ.II) த் துறை, சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர்(சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்) அவர்களின் சிறப்பு நிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி .

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

**(மா. சுப்ரமண்ய பிள்ளை)**
**அரசு சார்புச் செயலாளர்.**